செ.வெ.எண்: நாள் 31.05.2021

**நாமக்கல் மாவட்டம்**

**கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து தனியார் மருத்துவமனை மருத்துவர்களிடம் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் அவர்கள் காணொலி காட்சி மூலம் கலந்துரையாடினார்**

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக காணோலி காட்சி உரையாடல் அரங்கில், கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து தனியார் மருத்துவமனை மருத்துவர்களிடம் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ். இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.05.2021) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் அவர்கள் காணொலி காட்சி மூலம் தனியார் மருத்துவமனை நிர்வாகத்தினர் மற்றும் மருத்துவர்களுடன் கலந்துரையாடினார்.

**இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தாவது,**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய்த்தொற்றிலிருந்து தமிழ்நாட்டை காக்க ஆக்ஸிஜன் பற்றாக்குறையை விரைவாக சீர்செய்துள்ளார். ஆக்ஸிஜன் மற்றும் சாதாரண படுக்கைகளின் எண்ணிக்கையை அதிக அளவில் உயர்த்தியுள்ளார்.

நோயாளிகள், நோயாளிகளின் உறவினர்கள், செவிலியர்கள், மருத்துவர்களுக்கு மனதைரியத்தை அதிகரிக்கும் வகையில் உங்களுடன் நான் இருக்கின்றேன் என்பதை உணர்வு பூர்வமாக உணர்த்தும் வகையில் எந்த முதலமைச்சரும் செய்யாத வகையில் தன் பாதுகாப்பு உடையுடன் (PPE) கிட் அணிந்து கொரோனா நோயாளிகளை நேரில் சென்று பார்வையிட்டார்

நாமக்கல் மாவட்டத்தில் நோயாளிகள் ஆக்ஸிஜன் அளவு மிகக் குறைவான நிலையில் மருத்துவமனைகளுக்கு வருவதை தடுக்கும் வகையில் மாவட்டம் முழுவதும் 2,500 பல்சாக்ஸி மீட்டர்களுடன் தன்னார்வலர்கள் வீடுவீடாக சென்று பொதுமக்களுக்கு கொரோனா அறிகுறிகள் உள்ளதா, ஆக்ஸிஜன் அளவு எவ்வளவு உள்ளது என பார்வையிட்டு அதனடிப்படையில் உடனடியாக கொரோனா சிகிச்சை மையங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தனியார் மருத்துவமனைகளில் 50 சதவீத படுக்கைகளை கொரோனா சிகிச்சைக்காக வழங்க கேட்டுக் கொண்ட நிலையில் 61 சதவீதமாக 772 படுக்கைகளை வழங்கியதற்காக நன்றியை தெரிவிக்கின்றேன்.

மாண்புமிகு முதமைச்சரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது 86 நோயாளிகளுக்கு கொரோனா நோய்த்தொற்றிற்கான சிகிச்சை அளித்து வருகின்றீர்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஆக்ஸிஜன் அல்லாத படுக்கை வசதி சிகிச்சை அளிக்க நாளொன்றுக்கு ரூ.5,000/- கட்டணமும், ஆக்ஸிஜனுடன் கூடிய படுக்கை வசதி சிகிச்சை அளிக்க நாளொன்றுக்கு ரூ.15,000/-, கட்டணமும், வெண்டிலேட்டருடன் கூடிய தீவிர சிகிச்சை அளிக்க நாளொன்றுக்கு ரூ.35,000/- கட்டணமும், தீவிர சிகிச்சை பிரிவில் ஊடுருவாத வெண்டிலேட்டர் (Non – invasive ventilation) (CPAP / Bi-PAP) சிகிச்சை அளிக்க நாளொன்றுக்கு ரூ.30,000/- கட்டணமும், ஆக்ஸிஜனுடன் கூடிய தீவிர சிகிச்சை படிப்படியாக குறைப்பதற்கு (ICU with O2 only as stepping down) நாளொன்றுக்கு ரூ.25,000/- கட்டணமும் என உயர்த்தி அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சிகளுக்கு நாமக்கல் மாவட்டத்தில் நான் சார்ந்த மருத்துவத்துறை நண்பர்களான நீங்கள் அனைவரும் அர்பணிப்பு உணர்வுடன் சிகிச்சை அளித்து முன்னுதாரண மாவட்டமாக உருவாக்க வேண்டும். எனவே காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டையுடன் வரும் கொரோனா நோயாளிகளுக்கு தங்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்கா மூர்த்தி,இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.த.கா.சித்ரா, தேசிய நலக்குழும தொடர்பு அலுவலர் மரு.ரெங்கநாதன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவசான் உள்பட உள்பட மருத்துவர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள், கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.